பக்கங்கள் : எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆவணி 19 புதன்கிழமை (05.09.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 281

# ஒற்றையாட்சி முறைக்குள்ளேயே தீர்வு

# சமஷ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை!

## ஒருதலைப்பட்சமாகத் திணிக்கமுடியாது என்கிறார் மஹிந்த



கொழும்பு செப்.05

தமிழ் மக்களுக்குள்ள பிரச்சினைகள் உண்மையானவை. அவை தீர்த்துவைக்கப்பட வேண்டியவை. அவற்றுக்கான தீர்வு ஒற்றையாட்சி முறைக்குள்ளேயே அமைய வேண்டும்; அமையும். சமஷ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை.

நான் எந்தத் தீர்வையும் ஒரு தலைப்பட்சமாகத் திணிக்க முடியாது. சிங்கள வாக்காளர்களின் விருப்பத்துடனேயே - ஆதரவுடனேயே - தீர்வு ஒன்றைக் கொண்டுவர இயலும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

சமஷ்டி என்ற சொல் இலங்கையில் உருப் படி இல்லாத ஒன்றாகும். சமஷ்டி என்றால் நாட்டைத் துண்டாவது என்ற எண்ணமே மக்களிடம் குடிகொண்டுள்ளது. அதிகாரத்தை பகிர்ந்துகொள்ளுதல் என்ற பதத்தையே நான் விரும்புகிறேன் - என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

புதுடில்லியிலிருந்து வெளிவரும் "நியு போஸ்ட் இண்டியா" என்ற சஞ்சிகையின் செய்தியாளருக்குக் கொழும்பில் - அலரி மாளிகையில் வைத்து - காலை உடற்பயிற்சியை முடித்துக் கொண்டபின் வழங்கிய செவ்வி ஒன் றிலேயே அவர் தமது நிலைப்பாட்டை எடுத்துரைத்துள்ளார்.

அவர் அளித்த அந்தச் செவ்வியில் குறிப்பிட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:

நாட்டின் சரித்திரத்தையோ, எனது அரசியல் நிலைப்பாடுகளையோ நான் இரவோடு இரவாக மாற்றமுடியாது.

ஜனாதிபதித் தேர்தலின்போது விடுதலைப் புலிகள், பகிஷ்கரிப்பை திணித்ததினால் தமிழ்ப் பிரதேசங்களில் எனக்கு (08ஆம் பக்கம் பார்க்க)

# பல புதிய வரிகளுடன் நாளை மினி 'பட்ஜெட்'!

## வர்த்தமானி மூலம் வருகிறது; எதிர்க்க ஜே.வி.பி. கங்கணம்

கொழும்பு, செப்டெம்பர் 5

பல புதிய வரிகளை விதித்து மக்களை மேலும் நெருக்கடியில் ஆழ்த்தும் திட்டம் ஒன்றை அரசு முன்னெடுத்துள்ளது. இதற்கு அமைய, வரவு - செலவுத் திட்டம் (பட்ஜெட்) ஒன்றில் விதிப்பது போன்ற பல புதிய வரிகளை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவிப்பு ஒன்றை அரசு நாளை வியாழக்கிழமை வெளியிடவிருக்கின்றது. புதிய பல வரிகளை விதிக்கும் இந்த 'மினி பட்ஜெட்' போன்ற திட்டத்தைக் கடுமையாக எதிர்ப்போம்.

- இப்படி நேற்று ஜே.வி.பி. திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றது.

"தவறான பொருளாதாரக் கொள்கையினால் வங்குரோத்து நிலையை அடைந்துள்ள இந்த அரசு, நாளை மினி பட்ஜெட் ஒன்றைச் சமர்ப்பித்து நாட்டு மக்களின்மீது மேலும் புதிய வரிச்சுமைகளை ஏற்றி வைக்க முயல்கின்றது. சாதாரண உணவுப் பொருள்கள் உட்பட பல பொருள்களுக்கும், சேவைகளுக்கும் புதிய வரிகளையும் விதிக்க அரசு முடிவு செய்துள்ளது.



"நாடாளுமன்றத்தில் 113 ஆசனங்கள் தம்மிடம் இருக்கும் துணிவில் நாட்டு மக்களைத் துச்சமாகக் கருதி இப்படிச் செய்கிறது அரசு. மக்களை உதாசீனப்படுத்தும் (08ஆம் பக்கம் பார்க்க)

## சித்தாண்டியில் இருவர் சுட்டுக்கொலை

கொழும்பு,செப்.5

மட்டக்களப்பு, சித்தாண்டிக்குடிப் பகுதியில் படையினர் நேற்றுக்காலைநடத்திய துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இருவர் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

"சிவிலியன்கள் கொடுத்த தகவலின் பேரில் சித்தாண்டிக்குடிப் பகுதியில் படையினர் தேடுதல் வேட்டை நடத்தினர். அப்போது படையினரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட விடுதலைப் புலிகள் மீது படையினர் நடத்திய பதில் தாக்குதலிலேயே இந்த இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்" - என பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தனது செய்தியில் குறிப் (08ஆம் பக்கம் பார்க்க)

# பயங்கரவாத நடவடிக்கைகளைத் தடுக்கவே மன்னாரிலுள்ள சிலாவத்துறை மீட்கப்பட்டது

## பிரதமர் ரட்ணசிறி கூறுகிறார்



"புலிகள் கிழக்கு மக்களை கொடுமைப் படுத்தியதுபோல் மன்னார் மக்களையும் கொடுமைப்படுத்தினர் எனவும்- அவர்கள் மீது பயங்கரவாத நடவடிக்கைகளைத் திணிக்க முயற்சிகளை மேற்கொள்கிறார்கள் என்றும்- மன்னார் மக்கள் கொடுத்த தகவலையடுத்தே சிலாவத்துறை மீது படையினர் தாக்குதல் நடத்தி அம்மக்களைக் காப்பாற்றினர்.

"நாட்டில் பேரழிவை ஏற்படுத்தி அதன் மூலம் மகிழ்ச்சியடையும் வெறிகொண்ட - வராகவே புலிகளின் தலைவர் பிரபாகரன் காணப்படுகின்றார். இந்த வெறியை -பயங்கரவாதத்தை நாம் இல்லாதொழிப்போம்"

-இவ்வாறு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்று நாடாளுமன்றில் பேசும்போது தெரிவித்தார்.

அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட (08ஆம் பக்கம் பார்க்க)

# தொடரும் மனித உரிமை மீறல்களை நிறுத்த ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுக்கவேண்டும்

## ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு அழுத்தம்

பிரஸ்ஸல்ஸ்,செப்.5

இலங்கையில் மனித உரிமை மீறல் சம்பவங்களை நிறுத்த ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை உடன் எடுக்கவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையிடம் கேட்டுள்ளது.

பிரஸ்ஸல்ஸ் வந்துள்ள வெளிவிவகார அமைச்சர் ரோகித போகல்லாகமவிடமே இப்படிக் கேட்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் அமைச்சர் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் பெரேரோ வோல்னரை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்சம்பவங்களை நிறுத்த உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும். இந்தச் சம்பவங்களை நிறுத்தத் தேவையான செயற்பாடுகளை அரசுஉடன் எடுக்கவேண்டும். இனிமேல் மனித உரிமைமீறல் சம்பவங்கள் இடம்பெற அரசு இடமளிக்கக்கூடாது - என்று அவர் அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

இலங்கையில் சமாதான முயற்சிகள் தொடர வேண்டும். சமாதானச்சூழல் நிலவவேண்டும் என்பதே ஐரோப்பிய ஒன்றியத்தின் விருப்பம் என்றும் அவர் தெரிவித்தார். (அ-1-5)

## முறக்கொட்டாஞ்சேனையில் இருவர் சூட்டுக்குப் பலி

மட்டக்களப்பு,செப்.5

மட்டக்களப்பு மாவட்டம் முறக்கொட்டாஞ்சேனையில் இரு இளைஞர்களை சிறப்பு அதிரடிப் படையினர் சுட்டுப் படுகொலை செய்துள்ளனர். முறக்கொட்டாஞ்சேனை தேவாபுரம் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

தேவாபுரம் பஸ்நிலையத்தை அண்மித்த பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அதிரடிப் படையினரை இலக்கு வைத்து தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது. இச் சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் இவர்களைச் சுட்டுக்கொன்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

# நாடாளுமன்றுக்கு ஜனாதிபதி வரப் பாதுகாப்பு இல்லை எனின் பிரதமர் உட்பட 225 எம்.பிக்களுக்கு மட்டும் அது இருக்கிறதா?

## நாடாளுமன்றில் எதிர்க்கட்சியினர் சீற்றத்துடன் கேள்வி

"பாதுகாப்பைக் காரணம் காட்டி ஜனாதிபதி செல்லமுடியாது எனக் கூறும் இடத்திற்கு பிரதமரை அனுப்பிப் பலியிடலாமா? தனி ஒருவரான ஜனாதிபதி நாடாளுமன்றிற்கு வந்தால் அவருடைய பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லை என்று கூறுகிறார்கள். அப்படியானால் சிரேஷ்ட தலைவரான பிரதமர் உட்பட 225 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு என்ன உத்தரவாதம்?"

-இப்படி எதிர்க்கட்சிகள் நேற்று நாடாளுமன்றத்தில் ஒட்டுமொத்தமாக தமது ஆதங்கத்துடன் கேள்வி எழுப்பினர்.

நேற்றுக் காலை நாடாளுமன்றம் கூடிய போது எதிர்க்கட்சிக் கொரடாவான ஜோசப் மைக்கல் பெரேரா பல்வேறு அமைச்சுக்களுக்கான நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டங்கள் தொடர்பாக பூர்வாங்க ஆட்சேபனை ஒன்றைக் கிளப்பினார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பல அமைச்சுக்களைத் தன்வசம் வைத்துக்கொண்டுள்ளார். அந்த அமைச்சுக்கள் தொடர்பான நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டங்களை அலரி மாளிகையில் நடத்துகின்றார்.

இதனால் அந்த ஆலோசனைக் குழுக் கூட்டங்களில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நிலையியல் கட்டளைகளின்படி நாடாளுமன்ற தெரிவுக்குழு மற்றும் அமைச்சுக்களுக்கான ஆலோசனைக் குழுக்களின் கூட்டம் நாடாளுமன்றக் கட்டடத்திலேயே நடக்கவேண்டும்.

குறிப்பாக பாதுகாப்பு அமைச்சு, நிதி அமைச்சு என்பன மிகவும் முக்கியமானவை. (08ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

### வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

**காலம்: 23.09.2007**

எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகச் சபைத் தெரிவும் 23.09.2007ஆம் திகதி தலைவர் இ.பேரின்பநாயகம் அவர்கள் தலைமையில் சங்கத் தலைமைச் செயலகத்தில் நடைபெறவிருக்கின்றதென்பதைத் தங்களுக்கு அறியத்தருகிறோம்.

உபவிதி 26இன் 7ஆவதின் பிரகாரம் மேற்படி வருடாந்த பொதுச் சபைக் கூட்டத்தில் பிரேரணைகள் பிரேரிக்க விரும்பும் உறுப்பினர்கள் அப்பிரேரணையின் பிரதியை 13.09.2007 அன்று நண்பகல் 12 மணிக்கு முன் மாவட்ட சங்கச் செயலாளருக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். குறிப்பிட்ட திகதிக்குப் பின் கிடைக்கும் பிரேரணைகள் பொதுக்கூட்ட நிகழ்ச்சி நிரலில் இடம்பெறமாட்டாதென்பதை தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இ.பேரின்பநாயகம்** தலைவர். | இல.559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | **கா.பாஸ்கரன்** செயலாளர்.

(சி/53554)

## DANISH DEMINING GROUP SRI LANKA

3/10 Wyman Road Tel: +94 (0) 21 222 8181
fna Fax: +94 (0) 21 222 8180

### ACANCY OF GIS FIELD OFFICER

Dan Demining Group is an INGO engaged in humanitarian mine actio in the North and North East provinces of Sri Lanka. The orgar ation has currently 450 employees in different positions. The GIS tion is expanding its activities in all operational areas.

The section where you will be located is using the national IMSMA Geo tabase. As an enhancement, the Geo-database will contain data on cl nce activities and survey data from households in the close icin f our operations.

task will be following:

- te and naintain the data in the geo-database
- Perfo data acquisition in the field
- Assi GIS officer with any task related to the geo-database
- P spatial analysis on data in our geo-database
- l staff with updated map material, sketch maps and progress ma

ly you must have experience with some of these technologies:

- GIS 8.x/9.1 & ArcEditor 8.x/9 (ESRI)
- rcPad 6.0 & Arc Pad Application builder (ESRI)
- MS Access, MS Office
- Field data acquisition using DGPS technology
- Cadastral survey methodology

You should be willing to live in Jaffna, where we have the Operational HQ and you need to make frequent traveling to other operational areas where DDG is in operation. You should be fluent in Tamil and Sinhala, and you have a working knowledge in English. Applications from Degree holders in Surveying Science or Geography will be an advantage.

We are looking for one person. Your title will depend on your qualifications, as will your initial salary level. The initial contract will be for one year with six months probation, but the GIS section is expected to remain in work for at least one year, so there is a definite option to stay longer with the organization. If you have any questions, feel free to contact our operations manager on e-mail.

Please submit your application before 15th September 2007 to jafofficemgr@ddg.lk or postal address: Operations Manager, Danish Demining Group, 18/10 Wyman Road, Jaffna. (64477)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.கொட்டடி சனசமூக நிலையத்தின் செயலாளர் மு.ஜெ.சுஜீந்திரன் அவர்களின் அன்பு மாமனும் எமது பிரதேச நலனில் அக்கறை கொண்டவருமாகிய

### *சின்னத்துரை சிவபாதம்*

அவர்கள் கடந்த 01.09.2007 இல் காலமானதையொட்டி துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**நிர்வாகிகள்,**
*கொட்டடி சனசமூக நிலையம், யாழ்ப்பாணம்.* (64500)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 - 09 - 1931



மறைவு 21 - 08 - 2003

### அமரர் பொன்னையா பாலசிங்கம்

**(Retired Superintendent of Audit)**

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்து - எமை
அவனியிலே மேன்மையுடன் வாழவைத்த தந்தையே!
இவ்வுலகம் விட்டு அவ்வுலகம் சென்று வாழ்கின்ற - உமை
ஈரிரண்டாம் ஆண்டுத் திதியில் நினைந்து வணங்குகின்றோம் அப்பா!

166/3, சேர் பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (64239)
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## Spoken & Grammar

வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும் (Printed Notes) A/L எடுத்த மாணவர்கள், வெளிநாடு செல்லவுள்ளோர்.

*தொடர்பு:* Jaffna Technical Institute, 077 9785749. (64509)

## தவறிவிட்டது

சியாமினி வாமதேவன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (856782794V) உட்பட முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைப்பை (Hand bag) 26.08.2007 அன்று யாழ்ப்பாணம் வெங்கடேச பெருமாள் கோயிலுக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டு கொள்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

021- 2226016, 0777535575 (64512)

வடமராட்சி மாணவர்களுக்கு...
கணனிக் கற்கை நெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

| பிரிவு I | பிரிவு II |
|---|---|
| 05.09.2007 முற்பகல் 10 மணி | 15.09.2007 முற்பகல் 10 மணி |

மிகக் குறைந்த கட்டணத்தில்

**Diploma Courses**

- Diploma in Microsoft Office
- Diploma in Desk top publishing
- Diploma in Computer Hardware
- Diploma in Auto Cad
- Diploma in Video Editing
- Diploma in Grapic Designing
- Diploma in Accounting Packages
- Internet & E-mail

சிறுவர்களுக்கான Certificate in Kid Wizard

* அனுபவமிக்க ஆசிரியர்களின் கற்பித்தல்
* விரிவான பாடத்திட்டம்
* வரையறையற்ற பாக செய்முறைப் பயிற்சிகள்

தனித்துவமிக்க கணனி நிறுவனம்

Online Classes — பதிவுகளுக்கு முந்துங்கள் — Free Hand outs

**St.Antony's Computer Litrecy Academy**
4th Cross Street, Point Pedro.
செண்.அன்ரனிஸ கணனி அறிவுசார் கல்வியகம்.
4ம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.

## மரண அறிவித்தல்கள்

### *சுப்பிரமணியம் இதயராஜ்*

**(சின்னத்தம்பி)**



யாழ்ப்பாணம், அரியாலையைப் பிறப்பிடமாகவும் நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இதயராஜ் (சின்னத்தம்பி) 03.09.2007 திங்கட்கிழமை அகால மரணம் அடைந்துவிட்டார்.

அன்னார் சுப்பிரமணியம் - ஸ்ரீரங்க குமாரி தம்பதியரின் செல்வப் புதல்வனும் சுகந்தினியின் அன்புக் கணவரும் கௌசிகன், ஜெயச்சந்திரன் (தபால் திணைக்கள ஊழியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஸ்ரீரங்சன் - சியாமளா தம்பதியரின் அன்பு மருமகனும் தவகுமாரி, பங்கஜகுமாரி, மோகனகுமாரி, தனகுமாரி, துரைசிங்கம், குணபாலா, சோதிராசா ஆகியோரின் பெறாமகனும் அமரர்களான தேசிகநாதன், முருகசேகரம் மற்றும் ஜீவகுமாரி, திருநாவுக்கரசு, நாகேஸ்வரி, லோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும் புவனேந்திரன், தர்மேந்திரன், சசிகலா, துஸ்யேந்திரன், துஸ்யந்தி, கஜேந்தினி, சர்மிளா, குகேந்திரன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் தனுஷன், வினுசியா, தனுசியா, நிர்மலா, சிவகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.68/2, இலந்தைக்குளம் வீதி, அம்மன் கோயில் முன் ஒழுங்கையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (05.09.2007) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இல.68/2, இலந்தைக்குளம் வீதி, அரியாலை. (64516)
தகவல்: **குடும்பத்தினர்.**

### *வைத்திலிங்கம் குலரட்ணம்*



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 273/11 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட வை. குலரட்ணம் நேற்று (04.09.2007) செவ்வாய்க்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் லலிதாவின் அன்புக் கணவரும், விக்னேஸ் (IIS, Group), ரமேஸ் (PC Paradise), பிரகாஸ் (Soffware Engineer UK) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயசோதி, மனோகரி, சுஜீத்தா ஆகியோரின் மாமனும் சகானா, அபிஷாயினி, தக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

273/11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-53566)
தகவல்: **மனைவி, பிள்ளைகள்.**

## வேலை ஆள்கள் தேவை

யாழ்.நகரில் பிரபல புடைவைக் கடைக்கு

**1. பெண் விற்பனையாளர்**
(புடைவை விற்பனையில் அனுபவமுள்ள யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்)

**2. கணக்குப் பதிவாளர் (ஆண்)**
(கடைக் கணக்கு எழுதுவதில் அனுபவமுள்ள 45 வயதுக்கு மேற்பட்டவர்)

*உடன் தேவை விண்ணப்பிக்கவும்.*

தொடர்பு: விள.இல.3005
மே/பா.உதயன். (சி53561)

## சிறப்பு கட்டணச் சலுகை IBMS

கணனிக் கற்கைநெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு I : 05.09.2007
பிரிவு II : 15.09.2007
பகல் 10 மணி

| Course | Fee |
|---|---|
| Diploma in Microsoft Office - 3 Months | 1000/= |
| Diploma in Desk Top Publishing - 3 Months | 1000/= |
| Diploma in Internet Technology - 3 Months | 1500/= |

**INTITUTE OF BUSINESS MANAGMENT STUDIES**

M.M.V. Road, Nelliyady, Karaveddy. (64339)

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் கடமையாற்றும் சமுர்த்தி தலைமை முகாமையாளர் **திருமதி ஜெயந்தி ஜேசுராசா** அவர்களின் தந்தை

### அன்ரன் இராசநாயகம்

அவர்கள் இறைபதம் அடைந்தமையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும், சகல நலன்புரிச் சங்க அங்கத்தவர்களும்
*நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், தெல்லிப்பழை.*

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

### வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவில்லும்

பிறப்பு 03 - 06 - 1923



இறப்பு 04 - 08 - 2007

கடந்த 04.08.2007 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி

### திருமதி முத்துத்தம்பி சின்னத்தங்கம்

*அவர்களின் மரணச் செய்தி அறிந்து தொலைபேசி மூலமும், தந்தி மூலமும், நேரிலும், இறுதிச்சடங்கில் பலவழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியை இன்று (05.09.2007) புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு பன்னாலையில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் நிகழவிருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*நாவலடி, பன்னாலை, தெல்லிப்பழை.* (64385)
*மகன்:-* V.J.S.சுந்தரம் (உடையார்)
*மருமகள்:-* **பேபி.**

## மரண அறிவித்தல்

### *கிருஷ்ணபிள்ளை தூயலிங்கம்*



கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ண பிள்ளை தூயலிங்கம் நேற்று (04.09.2007) செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் மதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை மற்றும் கமலாதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முத்தையா - செல்வமலர் தம்பதியரின் மருமகனும், குணபாலலிங்கம் (கனடா), இராஜேந்திரன், கலாநிதி (ஆசிரியை - கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவகாமசுந்தரி (கனடா), வசந்தகுமாரி, கிருஷ்ணமோகன் (பிரேமா ஸ்ரூடியோ, கோப்பாய்) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற வைரமுத்து - ஆச்சிமுத்து தம்பதியரின் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.09.2007 திங்கட்கிழமை கனடாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செல்வநாயகம் வீதி, கோண்டாவில் கிழக்கு.* (64514)
தகவல்:
**கி.கமலாதேவி** *(தாய்).*
**ந.கிருஷ்ணமோகன்** *(மைத்துனர்).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வக ஸ்தாபகர் நினைவு நிகழ்வுகள்

சுன்னாகம், சபாபதிப்பிள்ளை வீதியில் உள்ள வாழ்வகம் இல்லத்தின் ஸ்தாபகர் அமரர் செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் முதலாம் ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் எதிர்வரும் 11ஆம் திகதி காலை 8.45 மணிக்கு வாழ்வகத்தின் பொருளாளர் பொ.கமலநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் அன்னார் நினைவாக இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரது உருவச் சிலையை வாழ்வகத் தலைவர் ஆ. ரவீந்திரன் திரைநீக்கம் செய்து வைப்பார். தொடர்ந்து நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் மா.சின்னத்தம்பி நிகழ்த்துவார்.

இதனையடுத்து 'தமிழிசை அருவி' இடம்பெறும். இதில் பாட்டு - யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் த.றொபேட், வயலின் - அ.ஜெயராமன், மிருதங்கம் - க. கஜன், கடம் - நா.மாதவன், கஞ்சிரா - வி.ராகவன், முகர்சிங் - சி.செந்தூரன். (203)

# சி.டி.எம்.ஏ. தொலைபேசிகளுக்கு 'பக்ஸ்' வசதி வழங்கப்படவில்லை

## 'மோட்டோறோலா' பாவனையாளர்கள் விசனம்

யாழ்ப்பாணம்,செப்.5

'மோட்டோறோலா' தொலைபேசி இணைப்புகளுக்குப் பதிலாக ரெலிக்கொம் நிறுவனத்தினால் சி.டி.எம்.ஏ தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ள போதும் அதில் தொலைநகல் (பக்ஸ்) மற்றும் மேலதிக இணைப்பு வசதிகள் இல்லாமையால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக மோட்டோறோலாப் பாவனையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மோட்டோறோலா தொலைபேசிப் பாவனையாளர்கள் பல்வேறு வசதிகளைக் கருத்தில் கொண்டு அதிகளவு பணம் செலுத்தி தொலைபேசிச் சேவையுடன் 'பக்ஸ்' வசதியையும் முன்னர் பயன்படுத்தி வந்தனர்.

மோட்டோறோலா சேவை செயலிழந்தை அடுத்து மாற்றீடாக பாவனையாளர்களுக்கு 'சி.டி.எம்.ஏ' தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டன. எனினும் அந்த இணைப்பில் 'பக்ஸ்' வசதியையோ மேலதிக இணைப்பையோ பயன்படுத்த முடியாது அவர்கள் திண்டாடுகின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து மோட்டோறோலா பாவனையாளர்களாக இருந்து 'சி.டி.எம்.ஏ' இணைப்பைப் பெற்றவர்களுக்கு உடனடியாக 'பக்ஸ்' மற்றும் மேலதிக இணைப்பைப் பெறக்கூடிய வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதேவேளை - மோட்டோறோலா இணைப்பைப் பயன்படுத்தியபோது வைத்திருந்த 'பக்ஸ்' இயந்திரம் பயன்படுத்தப்படாது கிடப்பில் போடப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்டோர் சுட்டிக்காட்டுகின்றனர்.(202-95)

# பாவனைக்குதவாத ஆட்டாமாவை விற்பனை செய்த சங்கத்திற்கு எதிராக சட்டநடவடிக்கை

வலி.தென்மேற்கு,செப்.5

திருநெல்வேலிப் பிரதேசத்தில் 'லேபிள்' இல்லாது பொலித்தீன் பைகளில் அடைக்கப்பட்ட பாவைக்குதவாத ஆட்டாமாவை விற்பனை செய்த சங்கத்திற்தகு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என யாழ்.மாவட்ட உணவு - மருந்துப் பரிசோதகர் ரி.மகாதேவன் தெரிவித்தார்.

திருநெல்வேலிச் சந்திக்கு அண்மையிலுள்ள கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையத்திலேயே இவ்வாறு 'லேபிள்' இல்லாது பாவனைக்குதவாத ஆட்டாமா விற்பனை செய்யப்பட்டது. சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது அவை கண்டுபிடிக்கப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(202-135)

# கடந்த இரு தினங்களில் மட்டும் 9ஆயிரம் சைக்கிள்களுக்கு உரிமம்

## யாழ்.மாநகர சபையில் வழங்கப்பட்டதாக அதிகாரிகள் தகவல்

நல்லூர்,செப்.5

யாழ்.மாநக்ர சபையில் கடந்த இரு தினங்களில் 9 ஆயிரத்திற்கும் அதிகமான சைக்கிள்களுக்கு உரிமம் பெறப்பட்டுள்ளது என மாநகரசபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சைக்கிள்களுக்கு உரிமம் பெறப்படுவது அவசியம் என அண்மையில் படையினர் அறிவுறுத்தியிருந்தனர். இதையடுத்து சைக்கிள்களுக்கு உரிமம் பெறுவதற்கென பொதுமக்கள் மாநகரசபைக்கு வருவது அதிகரித்துள்ளது என அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். நேற்றும் பெருமளவான மக்கள் உரிமம் பெறுவதற்காக மாநகர சபையில் முண்டியடித்து நிற்பதைக் காணக்கூடியதாக இருந்தது.(202-111)



பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அண்மையில் நடைபெற்ற பல்துறைசார் மருத்துவ முகாமில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. (படங்கள்: சுந்தா)

# வல்லிபுர ஆழ்வார் ஆலயப் பெருந்திருவிழா எதிர்வரும் 11ஆம் திகதி ஆரம்பம்

நெல்லியடி,செப்.5

வரலாற்றுப் பிரசித்திபெற்ற வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 17 தினங்கள் இடம்பெறும் திருவிழாவில் சப்பரத்திருவிழா எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கும் தேர்த்திருவிழா 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.15 மணிக்கும் சமுத்திரத்தீர்த்தம் 26ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2மணிக்கும் கேணித்தீர்த்தம் 27ஆம் திகதி வியாழக்கிழமை காலை இடம்பெற்றுப் பிற்பகல் கொடியிறக்கத்துடன் திருவிழா நிறைவுபெறும்.

ஏனைய திருவிழாக்களில் பகல் திருவிழா காலை 9மணிக்கும் இரவுத் திருவிழா பிற்பகல் 3 மணிக்கும் நடைபெறும்.

திருவிழாக் காலத்தில் முதல் 6 தினங்களும் சுவாமி உள்வீதி உலா வருவதுடன் ஏனைய தினங்களில் சுவாமி வெளிவீதி உலா வருவார். வடக்கு வீதியில் சுவாமி வீதிவலம் வரும் போது கற்கோவளம் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நிகழ்ச்சி இடம்பெறும்.

திருவிழா காலத்தில் விசேட மேளக்கச்சேரியும், சமயசொற் பொழிவுகளும் இடம்பெறுவதுடன் அன்னதானப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

இந்த ஆலய திருவிழாவை முன்னிட்டு விசேட பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. பருத்தித்துறை -மந்திகை ஊடாக வல்லிபுரக் கோயில், பருத்தித்துறை - தும்பளை ஊடாக வல்லிபுரக் கோயில், யாழ்ப்பாணம் - வல்லிபுரக் கோயில் ஊடாக பருத்தித்துறை போன்ற ஒழுங்கில் பஸ் சேவைகள் நடைபெறும். (203-115)




# நெடுந்தீவு மக்களுக்கு உணவுப் பொருள்கள்

யாழ்ப்பாணம், செப். 5

நெடுந்தீவில் பாதிக்கப்பட்ட 420 மீனவக்குடும்பங்களுக்கு நான்குலட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது.

அரிசி, சீனி, மா, பருப்பு போன்ற பொருள்கள் நெடுந்தீவு கடற்றொழில் சங்கம் ஊடாக கடந்த மாதம் வழங்கப்பட்டன. (203)

# கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் 'கறுப்புச் சந்தை' இடம்பெறுகிறதாம்

## வாடிக்கையாளர்கள் முறைப்பாடு

குடாநாட்டிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் தற்போது 'கறுப்புச்சந்தை' இடம்பெறுவதாக பொதுமக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

கூட்டுறவுச் சங்கங்களில் பங்கீட்டு அட்டைகள் மூலம் பணத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை குறித்த திகதிக்குள் பெற்றுக்கொள்ளுமாறு கூட்டுறவு முகாமையாளர்கள் பொதுமக்களுக்கு அறிவுறுத்துகின்றனர்.

வறுமையில் வாழும் மக்கள் உடனடியாகப் பணத்தைத் திரட்ட முடியாது குறித்த திகதிக்குப் பின்னரே பொருள்களைக் கொள்வனவு செய்யச் செல்கின்றனர்.

அவ்வாறு சென்றால் பொருள்கள் முடிவடைந்துவிட்டதாகச் சங்கக் கிளைகளில் கூறப்படுகிறது.

எனினும் பின்னர் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்கு சங்கக் கிளைகளில் தமக்குத் தெரிந்தவர்களுக்கு பொருள்களை விற்பனை செய்வதை அவதானிப்பதாக நுகர்வோர் கூறுகின்றனர்.

தாம் குறித்த திகதிக்குள் பொருள்களைப் பெற முடியாமைக்கு தற்போதைய வறுமை நிலைமையே காரணம் என்றும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறான கறுப்புச் சந்தை இடம்பெறும் கிளைகளை இனங்கண்டு தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை மக்கள் கோருகின்றனர்.

(202-69)

# பொறியியல் இளமாணிப் பட்டப் படிப்புக்கான அடிப்படைக் கற்பித்தல் நடவடிக்கைகள்

யாழ்ப்பாணம்,செப்.5

ஜே.ஏ.எஸ்.ரி. நிறுவனம் தொலைக்கல்வி மூலம் ஆரம்பிக்கவுள்ள பொறியியல் இளமாணிப் பட்டப் படிப்புக் கற்கைநெறிக்கான அடிப்படைக் கற்பித்தல் நடவடிக்கைகள் எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் மாவட்டங்கள் தோறும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்திலிருந்து இக்கற்கை நெறியில் இணைய விரும்புபவர்கள் இல. 162, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நிறுவன அலுவலகத்தில் இன்று புதன்கிழமை தொடக்கம் விவரங்களை நேரில் சென்று பெற்று விண்ணப்பிக்கலாம்.

இப்பயிற்சி நெறிக்கு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞான/கணித பிரிவுகளில் சித்தியடைந்த (குறைந்த பட்சம் ஒரு பாடம்) சகல மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

அடிப்படைப் பயிற்சிகள் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாள்களில் நடைபெறும். ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் குறைந்த பட்சம் 50 மாணவர்கள் பயிற்சியில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். (202)

# அனுமதியின்றி சாராயம் விற்றவருக்கு அபராதம்

வலி.வடக்கு,செப்.5

மல்லாகம் பகுதியில் அனுமதி பெறாது சாராயம் விற்ற நபருக்கு மல்லாகம் நீதிமன்ற நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

மல்லாகத்தைச் சேர்ந்த வைத்தி கார்த்திகேசு என்பவரை சுன்னாகம் பொலீஸார் கைதுசெய்து மல்லாகம் நீதிமன்ற நீதிபதி முன் ஆஜர் செய்தனர்.

சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நீதிபதி அவருக்கு அபராதம் விதித்தார்.

(202-68)

# சண்டிலிப்பாய் பிரிவில் இவ்வருடத்திற்கான சிறந்த பண்ணையாளர்களாக 9 பேர் தேரிவு

சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் இவ்வருடத்திற்கான சிறந்த பண்ணையாளர்களாக 9 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மாடு வளர்ப்பில் சிறந்த பண்ணையாளர்களாக வ.ஸ்கந்தராசா (சுதுமலை வடக்கு),திருமதி மாயக்கிருஷ்ணர் செல்வராணி(மாதகல்), மா.பரமேஸ்வரன் (உயரப்புலம்) ஆகியோர் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

ஆடுவளர்ப்பில் சிறந்த பண்ணையாளர்களாக திருமதி ரவீந்திரநாதன் ரட்ணேஸ்வரி(ஆனைக்கோட்டை), கு.ஜெயசிங்கம்(சாவற்கட்டு), என்.றோக் ஜேம்ஸ் (பண்டத்தரிப்பு) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கோழி வளர்ப்பில் சிறந்த பண்யாளர்களாக செல்வி குணேஸ்வரி இராசதுரை (வடலியடைப்பு), ஐ.ரதீஸ்வரன்(நவாலி கிழக்கு), இ.ரமேஸ்(மனிப்பாய்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பரிசில்கள் விரைவில் வழங்கப்படும் என சண்டிலிப்பாய் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி அமுதா பிரபாகரன் தெரிவித்தார்.

(202-135)

# உலக விசர்நாய்க்கடி தினம் - செப்.08ஆம் நாள்



நோய் ஏற்பட்டால் மரணம் நிச்சயம். தடுப்பு மருந்து மூலம் நோயில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.

வருடாந்தம் உலகில் 55 ஆயிரம் மக்கள் இந்நோயினால் இறக்கின்றனர். அதிகமானனோர் ஆபிரிக்கா, ஆசியா, இந்தியா போன்ற நாடுகளில் இந்நோயினால் இறக்கின்றனர். யாழ்ப்பாணத்தில் கடந்த வருடத்தில் விலங்கு விசர் நோயினால் இறப்பு வீதம் 11.06 ஆக இருந்தது.

இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும்போது குடாநாட்டில் கூடுதலாக ஏற்பட்டுள்ளது. 2006ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் 11ஆயிரத்து 230 பேர் நாய்க் கடியினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 4ஆயிரத்து 293 பேர் கட்டாக்காலி நாய்களி னால் கடியுண்டுள்ளார்கள்.

நீர் வெறுப்பு நோய் என்பது -

வனவிலங்குகளிலிருந்து வளர்ப்பு மிருகங்களான நாய், பூனை போன்றவற்றிற் கும் நரி, கீரி, வௌவால், குரங்கு போன்றவற்றிற்கும் இந்நோய் ஏற்பட்டு மனிதர் களுக்கோ ஏனைய மிருகங்களுக்கோ கடிப்பதனால் இந்நோய் காரணியாக வைரஸ் கிருமி கடிபட்ட காயத்தினூடாக உடன் சென்று மனிதர்களுக்கு அல்லது மிருகங்களுக்கு ஏற்படுகின்றது.

'எங்கள் வளர்ப்பு நாய்களைக் காப்பாற்றுவோம். நோய் பரவுவதையும் தடுப்போம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

கரவெட்டி பிரதேச செயலகத்தில் கிராம அலுவலராக கடமையாற்றும்
**சூரியகுமார்** அவர்களின் தந்தை

### அமரர் பொன்னர் ஆழ்வாப்பிள்ளை

அவர்கள் 05.08.2007 அன்று இறைவனடி சேர்ந்துள்ளார். அவர்களின் 31 ஆம் நாள் நினைவுகள் இன்று அனுஷ்டிக்கப்படுவதால் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*பிரதேச செயலகம்,*
*கரவெட்டி.*

*பிரதேச செயலரும்,*
*உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கமும்.*

(64489)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 22 . 04 . 1981



உதிர்வு 17 . 08 . 2006

### அமரர் சுகுணராசா நிமலன் (நிமல்)

*திதி: அபரபக்க நவமி (05.09.2007)*

பாலைவனத்தில் பூக்கள் மலர்ந்திடலாம்;
எங்கள் மனத்தில் இனி மலர்ச்சியுண்டா?
சூரியன் திசை மாறி மறையலாம்;
தங்கள் நினைவலைகள் எமை விட்டு மறையுமா?
தெய்வத்துக்குக் கண்ணுமில்லை- எமக்குத்
தேம்பி அழத் தெம்பும் இல்லை
தேடியும் கிடையாத செல்வமடா- நிமலா,
நீ தீயிலும் தீயாத தங்கமடா
இனியொரு பிறவி எடுப்பின் - நீ
யுத்தமே இல்லாத தேசமொன்றில் மலர்ந்திடடா
உனை நினைத்து நினைத்துக் கதறியழ
எமை விட்டு எங்குதான் சென்றாயடா?
எம் வாழ்வில் விளக்கேற்றிய நீயே
எம் உயிராய்த் தீயில் எரிந்தாயே
வேதனையில் துடிக்கிறதோ எம் உள்ளம்
பாவியவன் பறித்தானே உன்னுயிரை
நீ வரும் பாதை பார்த்திருக்கும் எம்மிடம் நீ
வந்திடுவாய் எம் துயர் துடைக்க!

*உன் நிழலைத் தேடும்:*
அப்பா, அம்மா, அண்ணா, அண்ணி,
அக்கா, அத்தான், மனைவி, *மகன்* நிருஜன்,
*மருமக்கள்* நிலக்ஷன், மதுஷன், தர்ஷிகன், நிஷனி.

கரத்தன்,
நீர்வேலி.

(64433)

## ORGAN
## ஓர்கன் இசைப் பயிற்சி

வடமராட்சியில் மீண்டும்
ஒரு பயிற்சிப் பிரிவு
09.09.2007 ஞாயிறு மு.ப.10
மணிக்கு ஆரம்பமாகிறது.
* 10 பேர் கொண்ட இரு குழுக்களாக மட்டும் நடைபெறும்.

### தூரிகை
ம.ம.வி.வீதி, நெல்லியடி. (64488)

## விற்பனைக்கு

*ஜப்பான் நாட்டுத் தயாரிப்பான டைகற்சு சறேட் (***Daihatsu Charade***) 32 சிறி தொடர் இலக்கம் உடைய டீசல் காரும் அத்துடன் வெஸ்ப (***Bespa***) ஸ்கூட்டர் ஒன்றும் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு.*

தொடர்பு: 0779215550. (64442)

## நூல் வெளியீடு

காரைநகர்- வலந்தலை அத்திபுரக் கந்தன் தல வரலாறும் திருப்பாடல்களும் கொண்ட நூல் அண்மையில் ஆலய மண்டபத்தில் வைத்து வெளியிடப்பட்டது.

ஆசிரியர் தி.தவரத்தினம் தலைமையில் நடைபெற்ற வெளியீட்டு விழாவில் க.நித்தியதசீதரன் நூலை வெளியிட்டு வைத்தார். நூல் நயப்புரையை க.வாமதேவன் நிகழ்த்தினார். நூலில் வெளியாகிய பாடல்களை முத்தர் கிருஷ்ணர் (சாமியப்பு) பாடி மகிழ்வித்தார். (202- 28)

## அந்தியேட்டி அழைப்பு



கடந்த *05.08.2007*
அன்று இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத் தலைவர்
அமரர்
பொன்னர் ஆழ்வாப்பிள்ளை
அவர்களின் அந்தியேட்டி
கிரியைகள்
இன்று(*05.09.2007*)
புதன்கிழமை இடம்பெறும்.

காலை 6 மணியளவில் அன்னாரது இல்லத்தில் அஞ்சலி நிகழ்வும், ஆத்மசாந்திப் பூசையும் நடைபெறும். தொடர்ந்து மதியபோசனமும் இடம்பெறும். இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"வளர்மதி"
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி. (64487)

**பொ.தம்பிமுத்து** *(சகோதரர்)*,
**ஆ.சூரியகுமாரன்** *(மகன் கிராம அலுவலர்), முள்ளியான்.*

## JANASHAKTHI INSURANCE CO.LTD.

47,Muttiah Road, Colombo 2, SriLanka, PoBox 2202 Tel:+ 94112309999,
Fax:+ 94112334864, 2337160 E- Mail: insurance @ janashakthi.Com

JANASHAKTHI INSURANCE

### பதவி வெற்றிடங்கள்

காப்புறுதி துறையில் சர்வதேச தரச் சான்றிதழ் பெற்ற (ISO 9001: 2000) முன்னோடி நிறுனமான ஜனசக்திகாப்புறுதிக் கம்பனியானது ஆயுள் காப்புறுதித்துறையினை கிராமங்கள் தோறும் விஸ்தரிக்கும் நோக்கத்துடன் 18 வயதிற்கு மேற்பட்ட இளமையும் துடிப்பும் மிக்க இளைஞர், யுவதிகளிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

**பதவிகள்**

1. காப்புறுதி ஆலோசகர்கள்/ பிரதிநிதிகள்
2. வியாபார அபிவிருத்தி மேற்பார்வையாளர்கள்
3. வியாபார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

**தகைமைகள்**

1. க.பொ.த.(சா.த) சித்தி (கணிதம் உட்பட) அத்துடன் இம்முறை க.பொ.த. (உ.த)இற்கு தோற்றியவர்களும் விண்ணப்பிக்கலாம்
2. அனுபவம் விரும்பத்தக்கது (பதவி 3 இற்கு)

**அனுகூலங்கள்**

* கவர்ச்சிகரமான சம்பளம்
* இலவசக் காப்புறுதி
* வாகனக் கடன் வசதி
* விரைவான பதவி உயர்வுகள்
* விருதுகள் பெறும் வாய்ப்பு
* வெளிநாட்டு சுற்றுலா பயணங்கள்

நேர்முகத் தேர்வு:

| | இடம் | காலம் | நேரம் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் 2223827/ 2229552 | 07.09.2007 08.09.2007 | 9 a.m- 1 p.m |
| நெல்லியடி | விக்கினேஸ்வரா வீதி, நெல்லியடி, கரவெட்டி 2264418 | 07.09.2007 08.09.2007 | 9 a.m- 1 p.m |

**"காப்புறுதி என்றால் ஜனசக்தி"** (சி.53555)

## கல்வியாண்டு 2007 ற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன



A/L தகைமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர் கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபல பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதிலும் (Admission) உயர்கல்விக்கான வாய்ப்புக்களைப் பெறுவதிலும் தவறிவிடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL, UK வழங்கும் BTEC HND தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியைப் பெற்றுத்தருவதோடு உயர்கல்விக்கான ஏனையவற்றையும் உறுதிசெய்கின்றது. அதுமட்டுமல்லாது HND தகைமையைப் பெற்றுக் கொண்டவர்கள் போட்டி மிகுந்த வேலைவாய்ப்புச் சந்தையில் இலகுவில் தகுதியான வேலைகளைத் தட்டிச் செல்கின்றனர்.

### IIS City Campus இல் கல்விகற்று வெளியேறிய மாணவனின் கருத்து



கே. துவாரகேதன்
மீசாலை

க.பொ.தஉயர்தரப் பரீட்சை 2002 எனக்கு ஏமாற்றத்தை அளித்தது. பல்கலைக்கழக அனுமதியை தவறவிட்டேன். எனதுஎதிர்காலம் கேள்விக்குறியாகி என் கண்முன் நின்றது. மனமுடைந்திருந்த இவ்வேளையில் IIS City Campus இன் HND கற்கைநெறி தொடர்பான விளம்பரத்தினைப் பத்திரிகையில் பார்த்து நிறுவனத்துடன் தொடர்ப கொண்டு இக்கற்கைநெறி தொடர்பான பயனுள்ள பல விடயங்களை அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. உடனடியாக HND கற்கை நெறியில் இணைந்து கொண்ட நான் சரியாக 1½ வருட காலப்பகுதியில் HND கற்கைநெறியினை சிறப்பான முறையில் பூர்த்தி செய்து கொண்டேன்.

நிறுவனம் எமக்களித்த வாக்குறுதிக்கமைவாக இறுதியாண்டு பட்டக் கல்வியினை இங்கிலாந்து சென்று கற்பதற்காக கிறீன்விச் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பித்தேன். HND சான்றிதழ் சர்வதேச அங்கீகாரம் பெற்றது என்பதால் எனக்கு உடனடியாக இறுதியாண்டுப் பல்கலைக்கழக அனுமதியும் இங்கிலாந்து செல்வதற்கான ஏனையவும் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. எனக்கோர் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கித் தந்த IIS City Campus நிறுவனத்திற்கு நான் என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன். குடாநாட்டில் இருக்கும் என் போன்ற மாணவர்களுக்கு IIS City Campus நிறுவனமும் அதன் HND கற்கைநெறியும் ஒரு மிகச்சிறந்த வரப்பிரசாதம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

### BTEC HND
World Class

Delivered Locally....... Recognised Globally

B.Sc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc.

↑

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1 ½ years )

↑

GCE A/L
with 2 Subjects

edexcel INTERNATIONAL
Approved Training Centre

## IIS CITY CAMPUS

# 200, Sivan Pannai Road, Jaffna

TP No. : 021 222 8060 Fax: 021 222 6933 Email: iiscc@sltnet.lk

## COMPUTER EXPRESS
### INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

#15, Sirambiyadi Lane, Jaffna *Branch* : #167, Kasthuriyar Rd. Jaffna
Phone : 021 222 8250 , 0777 222422

### மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2007 50% off

### A/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான விசேட பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

அனைவருக்கும் புலமைப்பரிசில்

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science, 4 Months, ~~8,250~~/= 1,650/= | Honours Diploma in Computer Science, 5 Months, ~~10,500~~/= 2,100/= | Diploma in Web page Designing, 4 Months, ~~8,250~~/= 1,650/= |
| Diploma in Graphic Desining, 4 Months, ~~8,250~~/= 1,650/= | Diploma in Desktop Publishing, 4 Months, ~~7,250~~/= 1,450/= | Diploma in Hardware Engineering, 3 Months, ~~7,250~~/= 1,450/= |
| Diploma in Auto CAD, 3 Months, ~~7,250~~/= 1,450/= | Diploma in Microsoft Office, 3 Months, 1,000/= | Accounting Package, 3 Months, ~~8,250~~/= 1,650/= |

**50% Off ADVANCE COURSES**

| | | |
|---|---|---|
| Diploma in Multimedia | ~~5500~~ | 2750 |
| Diploma in Video Editing | ~~6000~~ | 3000 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத கணனிப்பயிற்சி.

வகுப்புக்கள் ஆரம்பம் :
Batch I : 07/09/2007 - 9.00AM
Batch II : 08/09/2007 - 11.00AM
Batch III : 09/09/2007 - 11.00AM
Batch IV: 12/09/2007 - 2.00PM

September 15ம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க. மாற்றுக்குழு உறுப்பினர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கத் தடை

## கொழும்பு நீதிமன்றம் விதித்தது

கொழும்பு,செப்.5

ஐ.தே.கட்சியிலிருந்து அரச பக்கம் தாவிய ஐ.தே.க. மாற்றுக்குழு உறுப்பினர்கள் 11 பேருக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஐ.தே.கட்சிக்கு இடைக்காலத் தடை விதித்திருக்கின்றது கொழும்பு மாவட்ட நீதிமன்றம்.

11 உறுப்பினர்களும் தாக்கல் செய்த மனு மாவட்ட நீதிமன்றத்தில் நேற்றுமுன்தின் எடுத்துக்கொள்ளப் பட்டபோதே நீதிவான் திஸர ரட்நாயக்க இந்த உத்தரவை விடுத்தார்.

இதேவேளை, மேற்கண்ட உறுப்பினர்களுக்கு எதிரான விசாரணையை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் 17ம் திகதி வரைக்கும் மேற்கொள்ளக்கூடாது எனவும் அவர் உத்தரவு பிறப்பித்தார்.

நவின் திஸநாயக்க, ராஜித சேனாரட்ண, ஹேம குமார நாயக்கார, பி.தயாரட்ண, மஹிந்த விஜயசேகர, லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தன, நியோமல் பெரேரா, பந்துல குணவர்த்தன, மயோன் முஸ்தபா மற்றும் எம்.எச்.முஹமட் ஆகியோருக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணைகளை ஐ.தே.க. நடத்தக்கூடாது என உத்தர விடக் கோரி அவர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலித்த பின்னரே நீதிமன்றம் இந்த உத்தவை விடுத்தது.

இதேபோன்று ஜி.எல்.பீரிஸ், கரு ஜயசூரிய உட்பட ஐ.தே.க. மாற்றுக்குழுவின் ஏனைய ஐந்து எம்.பிக்கள் தாக்கல் செய்திருந்த மனுக்கள் தொடர்பாக ஏற்கனவே கொம்பு மாவட்ட நீதிமன்றம் இதேமாதிரியான இடைக் காலத் தடை உத்தரவை கடந்த வாரம் பிறப்பித்திருந்தது என்பது தெரிந்ததே. (சி)

# மாவிலாறு நஷ்டஈட்டு ஊழலில் கைதானவருக்கு பிணை மறுப்பு

கொழும்பு,செப்.5

மாவிலாறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நஷ்டஈட்டுக் கொடுப்பனவில் ஊழல் மோசடி செய்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் தொடர்ந்து விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஐவருக்கு பிணை அனுமதி வழங்க கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றம் மீண்டும் மறுத்துவிட்டது.

சந்தேக நபர்கள் ஐவர் சார்பிலும் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு மீதான விசாரணை கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிவான் குசல சரோஜினி வீரவர்த்தன மனுவை நிராகரித்தார்.

மேற்படி மோசடி வழக்குத் தொடர்பாக இரண்டாயிரத்து 918 விவசாயிகளிடம் விசாரணை நடத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. அதில் சிலர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றனர். எனவே விசாரணை நடத்த கால அவகாசம் வேண்டும் என குற்றப்புலனாய்வுப் பொலிஸார் சார்பில் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் பிணை மனுவை நிராகரித்த நீதிவான்,சந்தேக நபர்களை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (சி)

# சிலாவத்துறையிலிருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபா உதவி

கொழும்பு,செப்.5

மன்னார், சிலாவத்துறைப் பகுதியில் படையினரின் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபா வீதம் வழங்கப் பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை மீள் குடியேற்றத்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்திருந்தார்.

இராணுவ நடவடிக்கை காரணமாக சுமார் 4 ஆயிரம் பேர் வரையிலானோர் இடம்பெயர்ந்த நிலையில், நானாட்டான் மகாவித்தியாலயத்தில் 28 குடும்பங்களைச் சேர்ந்த 807 பேரும், முருங்கன் டொன் பொஸ்கோ நிலையத்தில் 81 குடும்பங்களைச் சேர்ந்த 257 பேரும் தங்கியிருக்கின்றனர்.

அகதிகளாக வெளியேறிவரும் மக்களைச் செயலக அதிகாரிகளும், படையினரும் பதிவுசெய்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் இடம்பெயர்ந்த மக்களுக்காக வழங்கப்பட்ட பணத்தொகையைப் பெறாதவர்களுக்கென மேலும் 12 லட்சம் ரூபா அரச அதிபரிடம் ரிஷாத் பதியுதீன் வழங்கினார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (சி)

# பாரிஸில் உள்ள இலங்கைத் தூதரகம் தாக்கப்பட்டது

கொழும்பு,செப்.5

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் உள்ள இலங்கைத் தூதரகம் ஞாயிறன்று தாக்கப் பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோகித போகெல்லாகம பாரிஸ் நகருக்கு விஜயம் செய்ய உள்ள இத்தருணத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தூதரகத்தில் தேசியக் கொடி ஏற்றப்படும் இடத்தில், இலங்கையின் தேசியக் கொடி சேதமாக்கப்பட்டதாகவும் அரசாங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-5)

# ஜி.சீ.ஈ (சா/த) பரீட்சை டிச.10 இல் ஆரம்பம்

கொழும்பு,செப்.5

ஜி.சீ.ஈ. (சாதாரண) பரீட்சை டிசம்பர் மாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகும் என்று பரீட்சை ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

இப்பரீட்சைக்கு 5 லட்சத்து 30ஆயிரம் மாணவர்கள் தோற்றவிருக்கின்றனர்.

இம்முறை இப்பரீட்சையில் மேலதிகமாக இரு பாடங்கள் இணைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

16 வயதிற்கு மேற்பட்ட பாடசாலை பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிப்பது கட்டாயம் ஆகும்.

தமது தேசிய அடையாள அட்டையைப் பரீட்சைக்குச் சமர்ப்பிக்கத் தவறும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பரீட்சைப் பெறுபேறுகளை அனுப்பும் நடவடிக்கையில் தாமதம் ஏற்படக்கூடும் என்றும் பரீட்சை ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

பாடசாலைப் பரீட்சார்த்திகளின் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பிக்கும் படிவத்தை அடுத்தமாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவேண்டும் என்று ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் ஏ.ஜி. தர்மதாச தெரிவித்துள்ளார். (அ-1-5)

# திருமலை கப்பல் பயணிகளிடம் அதிக பஸ்கட்டணம் அறவீடு

திருகோணமலை,செப்.5

பல இன்னல்களுக்கும் மத்தியில் யாழ்ப்பாணத்திலிருந்து கப்பலில் திருமலைவந்து பஸ்ஸில் கொழும்பு நோக்கிப் பயணிக்கும் பொதுமக்களிடமிருந்து பஸ்கட்டணமாக - பகல் கொள்ளை யாக- கூடுதல் பணம் அறவிடப்பட்டுவருகின்றது என விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் 185 ரூபா குறித்த பயணத்திற்காக அறவிடப்படும் நிலையில், தனியார் பஸ்களில் அதுவே 500 ரூபாவாக அறவிடப்பட்டு வருகின்றது எனப் பாதிக்கப்பட்டவர்கள் கவலையுடன் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்டவர் தெரிவித்ததாவது:

'நான் 26.08.2007 ஞாயிறு காலை 11 மணிக்கு திருகோணமலை பிறீமா துறைமுகத்தில் வந்திறங்கி அங்கிருந்து தனியார் பஸ்ஸில் கொழும்பு நோக்கிப் பயணமானேன்.

பயண ஆரம்பத்தில் பஸ்கட்டணம் சாதாரண கட்டணமே என்று நடத்துனரால் கூறப்பட்டது. ஆனால், ஹபரணை தாண்டியதும் தலா ரூபா 500 வீதம் ஒவ்வொரு பயணியிடமிருந்தும் வசூலிக்கப்பட்டது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, தனியார் போக்குவரத்துச் சங்கத் தலைவர் கெமுனு விஜேரட்ண போன்றோர் இந்த அநீதியைத் தடுக்கமாட்டார்களா? - எனக் கேட்டார். (சி)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் நாவலர் மணிமண்டபத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வில் பத்தொன்பதாம் நாளான இன்று புதன்கிழமை 'உன்னுள்ளே பார்' என்னும் தலைப்பில் சைவப்புலவர் நா.நவராஜ் சொற்பொழிவாற்றுவார். ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனையும் இடம்பெறும். (203-79-111)

* * *

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு இன்று மாலை 3 மணிக்கு சர்வதேச இந்துமதக் குருமார் ஒன்றிய அங்கத்தவர்கள் தர்மசாஸ்தா குருகுல அதிபர் தலைமையில் வேதபாராயணம் நிகழ்த்துவர். (203)

## பெருந்திருவிழா பக்திப்பாக்கள்



உலகமும் உயிரும் உம்பர் பிரானும்
கலகஞ் செய்யும் நடனங் கண்டால்
உலகில் பிறந்திறந் துழலா ஒன்று
நலஞ்சேர் நல்லூராசான் நவின்றான்
- யோகர் சுவாமிகள்

### இல்லைப் பயமென்று நடமாடு!

*நல்லை வடிவேலன் சொல்லு முபதேசம்*
*வெல்லும் வழியென்று தினம் கூறு*
*அல்லல் தனைப்போக்க அசுரர் தமைவீழ்த்த*
*சொல்லும் திருநாமம் கணக் கூறு!*

*சொல்லத் துடிக்கின்ற சோகம் பலநூறு*
*எல்லை இல்லைஇந்த அவனியிலே*
*தொல்லை வினைபோகும் துணிந்து புகழ்பாட*
*இல்லைப் பயம் என்று நடமாடு!*

- எஸ்.சிவானந்தராஜா.

### எங்கள் பெருமானே!

மாதை மணந்தவனே முருகப் பெருமானே -
போதை தெளிந்த தெடா எங்கள் பெருமானே!
பேதைகள் வாழவேண்டும் முருகப் பெருமானே
சூதை வென்று வாழவேண்டும் எங்கள் பெருமானே
பாதை திறந்துவிடு முருகப் பெருமானே.

- *மட்டுவில் க.சி.சதாசிவம்.*

### சமாதானத்தைத் தந்திடையா!

பக்தி மொழியால் நானுனை
பாடவேண்டும் பாரெல்லாம்
உன் புகழை பேச வேண்டும்
சித்தமெல்லாம் இனிக்க
வைக்கும் சிவ மைந்தா சீக்கிரமே
சமாதானத்தை தந்திடய்யா!
சத்தியமே வடிவான நல்லூரா
சாற்றிடய்யா நின்னருளை சான்றுடனே!

- இராமஜெயபாலன் *(கொக்குவில்).*

# அதிபர், ஆசிரியர்களுக்கு கல்வியமைச்சால் சிபார்சு செய்யப்பட்டுள்ள சம்பள விவரங்கள்

யாழ்ப்பாணம்,செப்.5

இலங்கை ஆசிரியர் சேவை மற்றும் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களுக்கென கல்வி அமைச்சால் சிபார்சு செய்யப்பட்ட புதிய சம்பளப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்தவர்களுக்கு பீ.ஏ.சி இலக்கம் 06/2006 சுற்றறிக்கையின் பிரகாரம் அவர்கள் தற்பொழுது பெற்றுக்கொண்டிருக்கும் ஆரம்பச் சம்பளமும் (ஒருமாதத்துக்குரியது) கல்வி அமைச்சினால் சிபார்சு செய்யப்பட்டதுமான (ஒரு மாதத்துக்கு உரியது) சம்பளப் பட்டியல் வருமாறு:

| ஆசிரியர் சேவை தரம் | தற்பொழுது பெறுவது (மாதம்) | கல்வி அமைச்சு சிபார்சு செய்தது (மாதம்) |
|---|---|---|
| தரம்: 3 வகுப்பு II | 12,920 ரூபா | 14,870 ரூபா |
| தரம்: 3 வகுப்பு I | 13,790 ரூபா | 17,110 ரூபா |
| தரம்: 2 வகுப்பு II | 16,350 ரூபா | 20,160 ரூபா |
| தரம்: 2 வகுப்பு I | 17,900 ரூபா | 22,935 ரூபா |
| தரம்: I | 21,345 ரூபா | 25,515 ரூபா |

இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களுக்கு பீ.ஏ.சீ. இலக்கம் 06/2006 சுற்றறிக்கையின் பிரகாரம் அவர்கள் தற்பொழுது பெற்றுக்கொண்டிருக்கும் ஆரம்பச் சம்பளமும் (ஒரு மாதத்துக்கு உரியது) கல்வி அமைச்சினால் சிபார்சு செய்யப்பட்டதுமான (ஒரு மாதத்துக்கு உரியது) சம்பளப் பட்டியல் வருமாறு:

| அதிபர் சேவை தரம் | தற்பொழுது பெறுவது (மாதம்) | கல்வி அமைச்சு சிபார்சு செய்தது (மாதம்) |
|---|---|---|
| தரம்: 3 | 16,350 ரூபா | 18,490 ரூபா |
| தரம்: 2 வகுப்பு II | 17,900 ரூபா | 21,990 ரூபா |
| தரம்: 2 வகுப்பு I | 21,345 ரூபா | 25,515 ரூபா |
| தரம்: I | 21,900 ரூபா | 28,095 ரூபா |

சம்பள அதிகரிப்பு தொடர்பாக கல்வி அமைச்சினால் இடைக்கால சம்பள அதிகரிப்பாக "தேசிய சம்பள நிர்ணய பதவி ஆளணி ஆணைக்குழுவுக்கு" சிபார்சு செய்யப்பட்ட அடிப்படையில் சம்பளம் உயர்வு வழங்க வேண்டும் என ஆசிரியர் தொழிற்சங்கங்கள் கோரி வருகின்றன. தமது கோரிக்கையை வலியுறுத்தி ஜி.சீ.ஈ. உயர்தர விடைத்தாள் மதிப்பீட்டு பணியையும் புறக்கணித்து வருகின்றன.

இந்நிலையில் இன்று புதன்கிழமை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ள சுற்றறிக்கையில் தமக்குத் திருப்தி ஏற்பட்டால் தொழிற்சங்க போராட்டத்தைக் கைவிட்டு விடைத் தாள் மதிப்பீட்டு பணிக்கு ஆசிரியர் தொழிற்சங்கங்கள் திரும்பலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (202-11)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


CIMA

உங்களின் தொழில் வாழ்வை சிறப்பாக
உருவமைத்துக் கொள்ள

# ஆசையா?

சிஐஎம்ஏ அதிக தொழில் தெரிவுகளை உங்களுக்கு வழங்குகின்றது. முக்கிய தொழில் திறமைகளுக்கு வலுவூட்டுவதுடன் இந்த சிஐஎம்ஏ தகுதியானது. நிதித்துறை முகாமைத்துவத்துக்குள்ளேயும் வெளியிலுமான தொழில் தெரிவுகளை மிகவும் பரந்த துறைகளுக்கு விரிவுபடுத்துகின்றது.

உயர் சாதனையாளர்கள் சிஐஎம்ஏயையே தெரிவு செய்கின்றார்கள். சிஐஎம்ஏயை தெரிவு செய்வதன் மூலம் ஓர் உத்வேகமிக்க நிறை பயன் தரும் தொழிலை நோக்கிய முதல் அடியை எடுத்து வைக்கிறீர்கள். ஒரு தொழிலுக்கான தகுதி என்ற முறையில் நீங்கள் வெறும் எண்ணிக்கையைக் குறிக்கும் ஒருவராக இருக்கமாட்டீர்கள் என்பதை அது உறுதிப்படுத்துகின்றது. அத்தோடு உயர் தராதரங்களையும் உத்தரவாதப்படுத்துகிறது என்பது நிதர்சனம். உங்களது தொழில் காலம் முழுவதிலும் புதிய கதவுகளை அது திறந்து விடுவதாக அமையும். சிஐஎம்ஏ உறுப்பினர்கள் சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகளில் இருக்கிறார்கள். இது காலத்தின் உண்மை. இது பெரும் சாதனைகளை நிலைநாட்ட வழியிட்டுச் செல்கிறது என்பது நிரூபணமாகியுள்ளது. சிஐஎம்ஏ தொடக்கம்தான். உங்களின் தொழில் வாழ்வு எவ்வாறு மேம்பாட்டுடன் அமைய வேண்டும் என்ற இறுதி முடிவை நீங்களே எடுக்கவேண்டும்.



CIMA Colombo, 356 Elvitigala Mawatha, Colombo 5
T. 2503880 | F. 2503881 | E. colombo@cimaglobal.com | www.cimaglobal.com
CIMA Kandy, 254 Peradeniya Road, Kandy
T. 081 2227882 | F. 081 2203843 | E. kandy@cimaglobal.com

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சகலரும் ஏற்கும் தீர்வல்ல நியாயமான தீர்வே அவசியம்

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் - சமாதான முறையில் - தீர்வு காண்பது குறித்துப் பேசும் தென்னிலங்கைத் தலைவர்கள் மீண்டும் மீண்டும் ஒரு விடயத்தை வலியுறுத்தி வருவதைக் காணமுடிகின்றது. அது, நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியில் இருந்து, எதிர்க்கட்சித் தலைவர் முதற்கொண்டு, சாதாரண தென்னிலங்கைத் தலைவர்கள் வரை பெரும்பாலும் அனைவரும் திரும்பத் திரும்பக் கூறும் விடயம்தான்.

இனப்பிரச்சினைக்கான எந்தத் தீர்வும் தென்னிலங்கை உட்பட நாட்டின் அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்படும் வகையில் அமைய வேண்டும் என்ற கருத்துத்தான் அது.

அதாவது எந்தத் தீர்வும் நாட்டின் பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதே இதன் உட்பொருள்.

மேலோட்டமாகப் பார்த்தால் இந்தக் கருத்து சரியானதாகவும் முற்றிலும் நியாயமானதாகவும் தோற்றும். சர்வதேச சமூகம் வரை இதுவே நியாயமான நிலைப்பாடு என்ற எண்ணப் போக்கும் காணப்படுகின்றது.

ஆனால் அதுதான் தப்பு. அடிப்படைத் தவறும் கூட.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையே இத்தகைய பெரும்பான்மை - சிறுபான்மை என்ற விவகாரத்தில் முகிழ்ந்தே இத்துணை தூரம் விஸ்வரூபம் எடுத்துப் பெரும் பிணியாகப் பிணித்துப் பீடித்துப் பரவி நிற்கின்றது.

இலங்கையில் சிறுபான்மையினரான தமிழர்கள் உரிமைகள் மறுக்கப்பட்டு, வாழ்வியல் ஆதாரங்கள் பறிக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டவர்களாக வாழும் அவல நிலைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்கள் என்ற உண்மையை ஏற்றுக் கொள்ளும் சர்வதேசம் உட்பட்ட சகல தரப்புகளும், இந்த அரச ஒடுக்குமுறை, 'பெரும்பான்மையினரின் விருப்பே முடிவு' என்ற ஜனநாயகக் கேலிக்கூத்தின் பெயரில்தான் இங்கு அரங்கேற்றப்பட்டது என்ற பின்புல உண்மையைக் கருத்தில் எடுத்துக் கொள்ளத் தவறிவிடுகின்றன.

ஒன்றுபட்ட தேசிய இனக் கட்டமைப்பாகத் தமிழர்கள் வாழ்வதற்கு அடிப்படையான ஆதாரங்களை சிதைத்து அழிக்கும் இன ஒடுக்குமுறை, பல் பரிமாண வடிவங்களில் தமிழர் தாயகத்தின் மீது சிங்கள தேசத்தால் கட்டவிழ்த்து விடப்பட்ட துன்பியல் வரலாற்றை இலங்கைத் தீவின் கடந்த அறுபது ஆண்டுகால சரித்திரம் நமக்குப் பகர்கின்றது.

தமிழரின் இருப்புக்கான மொழி உரிமை முதலில் பறிக்கப்பட்டது. அதன் பின் வேலைவாய்ப்பு உரிமைக்கும், கல்வி உரிமைக்கும் ஆப்பு வைக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து தமிழர்களின் தாயகத்தில் பாரம்பரிய நிலங்களைக் கபளீகரம் செய்யும் வகையில் அவர்களின் சொத்துரிமை, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் அபகரிக்கப்பட்டது. அதையடுத்து தமிழர்களின் சமய, பண்பாட்டு வாழ்விற்கும் ஊறு விளைவிக்கப்பட்டது. இப்போது அவர்களின் உயிர்வாழும் அடிப்படை உரிமைக்கே பங்கம் விளைவிக்கப்படும் நிலைமைக்கு அது மோசமடைந்திருக்கின்றது.

இவை எல்லாம் எங்ஙனம் சாத்தியமாகின? எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டன?

ஜனநாயகப் பண்பியல்களின் பின்னடைவு விவகாரமான - 'பெரும்பான்மையினரின் கூற்றே செல்லுபடியாகும் தன்மையுடையது' என்ற நியாயாதிக்கத்தின் கீழேயே இந்த அவலங்கள் எல்லாம் இங்கு செயற்படுத்தப்பட்டன என்பதுதான் உண்மை.

தமிழர்களின் காலாதிகால உரிமைகளை அடியோடு பறித்தெடுக்கும் அம்சங்கள் நிறைந்த இலங்கையின் தற்போதைய அரசமைப்பு வரை, இனப்பாகுபாட்டுக்கும், இன ஒதுக்கலுக்கும், இனவழிப்புக்கும் வழி செய்யும் சட்டங்களும், ஒழுங்கு விதிகளும், ஏற்பாடுகளும் இவ்வாறு 'பெரும்பான்மையினரின் தீர்மானமே முடிவு' என்ற அடிப்படையிலேயே சிறுபான்மையினரான தமிழர்கள் மீது வல்வந்தமாகத் திணிக்கப்பட்டு அவர்களின் தலையில் கட்டி விடப்பட்டன.

பெரும்பான்மை இனம் தன்னுடைய இன ஒதுக்கல் போக்காலும் பேரினவாதப் பண்பியல்பாலும் மேற்கொள்ளும் அட்டூழியங்களில் இருந்துதான் தமக்கு விடுதலையும், நீதியும், நிவாரணமும் கிடைக்கவேண்டும் என்று சிறுபான்மையினரான தமிழர்கள் போராடுகிறார்கள். பெரும்பான்மை இனம் நீதி செய்ய மறுத்து - நியாயம் புரிய மறுத்து - சிறுபான்மையினரை அடக்கி, ஒடுக்கி, அழிக்க முயன்றமையால்தான், அதற்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடவும் அதன் மூலம் தற்காத்துக் கொள்ளவும் வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் தமிழர்கள்.

பேரினவாத மேலாதிக்க சிந்தனையிலும், மாயையிலும் மூழ்கிக் கிடக்கும் சிங்கள தேசம் அந்த மகாவம்ச மனவமைப்பிலிருந்து வெளிவரப் போவதில்லை என்பது தெரிந்துதான் தமிழர்கள் தமக்குத் தாமே நீதியையும் நியாயத்தையும் தேடிக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அதன் விளைவாக இந்த இலங்கைத் தீவு ரணகளமாகி இரத்த ஆறு ஓடும் அவலம் நேர்ந்திருக்கிறது.

அத்தகைய நிலையில் பெரும்பான்மையினரின் இணக்கத்துடன்தான் தீர்வு என்றால் அது சாத்தியமாகுமா? அநீதி இழைத்து வரும் பெரும்பான்மையினரின் சம்மதத்துடன்தான் நீதி செய்யப்பட வேண்டுமானால் அது நடக்கக்கூடிய - சாத்தியப்படக்கூடிய - விவகாரமா?

பெரும்பான்மை இனத்தவரின் சம்மதத்துடன் கூடிய தீர்வே வழங்கப்பட முடியும் என்பது குற்றமிழைத்தவரின் விருப்பையே வழக்கின் தீர்ப்பாகக் கொள்ளமுடியும் என வலியுறுத்துவதற்கு ஒப்பானதாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு பெரும்பான்மை இனத்தவர்களின் சம்மதத்துடன்தான் என்பதை விடுத்து, அது நீதி செய்வதாகவும், நியாயம் புரிவதாகவும் அமையவேண்டும் என்பதே முக்கியம்.

பாதிக்கப்பட்ட தரப்புக்கு நீதி, நியாயம் செய்வதாக அமையக் கூடியது எதுவோ அதுதான் தீர்வாக அமையவேண்டும். அதைப் பெரும்பான்மை ஏற்று அனுசரிக்க வேண்டும். - இதுவே சர்வதேசம் உட்பட இவ்விவகாரத்தில் சம்பந்தப்படும் தரப்புகளின் தார்மீக நிலைப்பாடாக அமைவது கட்டாயம். அப்போதுதான் - அப்போது மட்டும்தான் - அமைதித் தீர்வு மூலம் இனப்பிரச்சினைக்கு முடிவு காணமுடியும். இதுதான் சாத்தியமான ஒரே வழியாகும்.

நீதியான தீர்ப்பு என்பது - நியாயமான தீர்வு என்பது - எண்ணிக்கை அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதாக அமையாமல் எண்ணத்தின் தரத்திற்குரிய அடிப்படையில் முடிவு செய்யப்படுவதாக அமையவேண்டும்.

# சிலாவத்துறையில் இருந்து புலிகள் பின்வாங்கினாலும் அது அரசுக்குக் கிடைத்த நிரந்தரமான வெற்றியல்ல

## சபையில் சிவசக்தி ஆனந்தன் எம்.பி. நேற்று விளக்கம்

''சிலாவத்துறையில் இருந்து புலிகள் பின்வாங்கிவிட்டமை படையினருக்குக் கிடைத்த நிரந்தர வெற்றி என்று அரசு நினைக்கக்கூடாது. இந்தச் சந்தர்ப்பத்தில் கடந்தகால யுத்த வரலாற்றை அரசு நினைத்துப் பார்க்க வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் நேற்று நாடாளுமன்றில் இடம் பெற்ற அவசரக்காலச் சட்ட நீடிப்புப் பிரேரணைமீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

அண்மையில் படை நடவடிக்கையால் முசலிக் கிராமத்தில் உள்ள 6 ஆயிரத்து 400 பேர் நானாட்டான் பகுதிக்கு படகுகள் மூலம் இடம் பெயர்ந்துள்ளனர்.

அவர்கள் உடுத்த உடைகளுடன் சொத்துகள் அனைத்தையும் கைவிட்டு வீடு வாசல்களை விட்டு, வெளியேறியுள்ளனர்.

*அவசர காலச்சட்டத்தை நீடிப்பதால் இனப்பிரச்சினை தீராது*

இந்த நிலைமையை இல்லா தொழிப்பதை விட்டு விட்டு, அவசர காலச் சட்டத்தை நீடித்துக் கொண்டு போவதால் இப் பிரச்சினை தீரப் போவதில்லை. சமாதானத்தை ஏற்படுத்தக் காத்திரமான நடவடிக்கை எதனையும் அரசு மேற்கொள்ளவில்லை.-

செட்டிகுளம் பகுதியில் ஊர்காவற் படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதற்காக படையினர் அப் பகுதி மக்களை மிகவும் மூர்க்கமாகத் தாக்கினர். இரு பொதுமக்களைக் கொலை செய்தனர்.

சமாதான முயற்சிகளை மேற்கொள்கிறோம் என்று சர்வதேச நாடுகளிடம் கூறிக்கொண்டு இங்கு யுத்தத்தை முன்னெடுக்க அரசு முயலுகிறது.

சிலாவத்துறையில் இருந்து புலிகள் பின்வாங்கி விட்டதால் அது படையினருக்குக் கிடைத்த நிரந்தர வெற்றி என்று அரசு நினைக்கக் கூடாது.

கடந்தகால யுத்த வரலாற்றை இந்த அரசு எண்ணிப் பார்க்கவேண்டும். அப்போது ஏற்பட்ட பலாபலன்களை இப்போது எடைபோட்டுப் பார்க்க வேண்டும். அவ்வாறில்லாது தொடர்ந்தும் யுத்தம் மீதே அரசு நம்பிக்கை வைப்பது ஒருபோதும் பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது - என்றார். (சி)

# அவசரகாலச்சட்டம் மேலும் நீடிப்பு

கொழும்பு, செப். 5

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் 76 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

ஆதரவாக 88 வாக்குகளும், எதிராக 12 வாக்குகளும் கிடைத்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மட்டுமே எதிர்த்து வாக்களித்தனர். ஐ.தே.கவினர் சபையில் இருக்கவில்லை.

இ.தொ.கா., முஸ்லிம் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய, ஜே. வி. பி. என்பன அரசுடன் இணைந்து ஆதரவாக வாக்களித்தன. (சி)

# சரண் அடைந்த தாய்மார், பிள்ளைகளை அரச இல்லத்தில் தங்க வைக்கப் பணிப்பு

## உரிய பாதுகாப்பு வழங்க இராணுவ, பொலிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், செப். 5

உயிர் அச்சுறுத்தல் காரணமாக சரண் அடைந்துள்ள இரு குடும்பங்களைச் சேர்ந்த தாய்மார் மற்றும் பிள்ளைகளை அரச அங்கீகாரம் பெற்ற இல்லத்தில் தங்க வைக்குமாறு யாழ். நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

அவர்களைத் தங்க வைக்கும் அரச இல்லத்துக்கு உரிய பாதுகாப்பை வழங்க ஏற்பாடு செய்யுமாறு யாழ். படைகளின் தளபதிக்கும், பொலிஸ் அத்தியட்சகருக்கும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சாவகச்சேரி சிவன் கோயிலடியைச் சேர்ந்த குடும்பம் ஒன்றும் மட்டுவிலைச் சேர்ந்த குடும்பம் ஒன்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் சரண் அடைந்திருந்தன.

இக்குடும்பங்களின் குடும்பத் தலைவர்கள் தவிர்ந்த தாய்மார் மற்றும் பெண், யாழ். நீதிவான் இ.த. விக்னராஜா முன் யாழ். பொலிஸாரால் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

வழமைபோல் இவர்களை யாழ். சிறைச்சாலையில் வைக்க நீதிமன்றம் உத்தரவு வழங்கவில்லை.

சிறுவர்கள், பெண்கள் ஆகியோரை யாழ். சிறைச்சாலையில் தங்க வைக்காமல், அரச அங்கீகாரம் பெற்ற இல்லமான கோப்பாய் கனான் தேவாலயத்தில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

மட்டுவிலைச் சேர்ந்த 30 வயது நிரம்பிய தாய், அவரது 13, 10, 3 வயதுடைய பிள்ளைகளும் சாவகச்சேரி சிவன் கோயிலடியைச் சேர்ந்த 30 வயதுள்ள தாயும் அவரது 8,5,1 வயதுப் பிள்ளைகளுமே சரண் அடைந்தவர்களாவர். (அ-1)

# கலைமலர் சஞ்சிகை வெளியீடு இன்று

யாழ்ப்பாணம், செப்.5

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையினர் வருடாந்தம் வெளியிடும் கலைமலர் சஞ்சிகை வெளியீட்டுவிழா இன்று காலை 9.30 மணிக்கு கலாசாலையின் வீரமணி ஐயர் நினைவு அரங்கில் இடம்பெறவுள்ளது.

கலாசாலை முதல்வர் ஆ. ஸ்ரீஸ் கந்தமூர்த்தி தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக பலாலி ஆசிரியகலாசாலையின் ஓய்வு பெற்ற பிரதி அதிபர் பண்டிதர் கலாநிதி ச.சச்சிதானந்தனும் சிறப்பு விருந்தினராக யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட் கலாநிதி ஜஸ்ரின் பி.ஞானப்பிரகாச அடிகளாரும் கலந்துகொள்வர்.

வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் செல்வி. செல்வஅம்பிகை நடராஜா நிகழ்த்த நூலின் முதற்பிரதியை ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி ஞானேஸ்வரி மகாலிங்கம் பெற்றுக்கொள்வார்.

ஆய்வுரையைகலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் நிகழ்த்துவார்.

கலாசாலையில் கடந்த வருடம் கல்வி பயின்ற பயிற்சி ஆசிரியர்களை இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு கலாசாலை அதிபர் கேட்டுள்ளார். (அ-203)

### நாளை

| | |
|---|---|
| ஆவணி - 20 | வியாழக்கிழமை 06.09.2007 |
| திதி : தசமி | முன்னிரவு 07.51 |
| நட்சத்திரம் : | திருவாதிரை மு.இ. 09.11 |
| சுபநேரம் | : 07.34 - 09.04 |
| ராகுகாலம் | : 01.34 - 03.04 |

# 13 தடுப்பு நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள 221 பேரை செஞ்சிலுவையினர் பார்வையிட்டனர்

கொழும்பு, செப்.5

பாதுகாப்புக் காரணங்களுக்காக கைது செய்யப்பட்டு இலங்கை அடங்கிலும் உள்ள 13 தடுப்பு நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள 221 கைதிகளை 17 தடவைகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் பார்வையிட்டுள்ளனர்.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள ஜூலை 27 - ஓகஸ்ட் 31 காலப்பகுதிக்கான அறிக்கையில் மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு -

யாழ்ப்பாணத்தில் இருந்து 26 நோயாளிகளையும் ஒன்பது மருத்துவமனை ஊழியர் களையும் விமானம் மூலம் கொழும்புக்கு அழைத்துச்செல்ல ஏற்பாடுசெய்யப்பட்டது. அத்துடன் 147 ஆய்வுகூட மாதிரிகளும் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

அத்துடன் சுகாதார நிலையங்களுக்கு நோய்த்தடுப்பு ஊசிகள், ஆய்வுகூட மருந்துப் பொருள்கள், மருத்துவ உபகரணங்கள் ஆகியனவும் விமானம் மூலம் எடுத்துவரப்பட்டு வழங்கப்பட்டன. இதன் மூலம் 634 நோயாளர்கள் பயன் அடைந்துள்ளனர்.

*கிழக்கில் மட்டக்களப்பில் இடம் பெயர்ந்தோர்முகாமில் இருந்த 14 பேருக்கும் திருகோணமலையில் ஒருவருக்கும் செயற்கை அவயவங்கள் பொருத்த ஏற்பாடு செய்யப்பட்டது. ஈச்சிலம்பற்று மருத்துவமனைக்கு மருந்துப்பொருள்களும், உபகரணங்களும் வழங்கப்பட்டன.

*மட்டக்களப்பில் 3 ஆயிரம் பேருக்கும் வாகரையில் 2,540 பேருக்கும் வன்னியில் 550 பேருக்கும் வவுனியாவில் 1,850 பேருக்கும் யாழ்ப்பாணத்தில் 3,870 பேருக்கும் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. (அ-1)

# மேலும் 2ஆயிரம் சீ.டி.எம்.ஏ இணைப்புக்களை குடாநாட்டில் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்.5

குடாநாட்டில் மேலும் 2ஆயிரம் சீ.டி.எம்.எம்.ஏ. தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

ரெலிக்கொம் நிறுவனத்தின் வடமாகாண பிரதிப் பொதுமுகாமையாளர் வி.யோகேந்திரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

இதுவரை 1,900 இணைப்புக்கள் வழங்கப்பட்டுவிட்டன. மேலும் இரண்டு ஆயிரம் இணைப்புக்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை வழங்கப்பட்ட இணைப்புக்கள் தொடர்பாக ஏதேனும் முறைப்பாடுகள் இருப்பின் அதுதொடர்பான விவரங்களை 0714 745344 என்ற இலக்கத்துக்கோ அல்லது 222 4199 என்ற இலக்கத்திற்கோ பக்ஸ் மூலம் அறிவிக்கலாம்.

அடுத்தகட்டமாக வழங்கப்படவுள்ள இணைப்புக்களில் ஏற்படக்கூடிய குறைபாடுகளைத் தணிப்பதற்கு இந்தவிவரங்கள் தேவைப்படுகின்றன.

எதிர்வரும் டிசெம்பர் மாதத்திற்குள் 10 ஆயிரம் இணைப்புக்களையும் 2008 இல் மேலும் 10 ஆயிரம் இணைப்புக்களையும் வழங்கி, காத்திருப்போர் பட்டியலை இல்லாமல் செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன - என்று அவர் தெரிவித்தார். (அ-1)

# புலிகளின் புத்தகங்களுடன் சென்னையில் ஒருவர் கைது!

## மலேசியாவுக்கு விமானம் ஏறவிருந்த சமயம்

சென்னை, செப். 5

இந்தியாவில் தடைசெய்யப்பட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்டவை எனக் கூறப்படும் நூல்களைத் தம்முடன் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சென்னை விமான நிலையத்தில் வைத்து ஒருவர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்.

தமிழகத்தின் திருவாரூர் மாவட்டத்திலிருக்கும் மன்னார்குடி பகுதியைச் சேர்ந்த சுரேஷ்(வயது - 29)என்பவரே சென்னை விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்.

மலேசியத் தலைநகர் கோலாலம்பூருக்குச் செல்வதற்காக விமான நிலையத்துக்கு வந்த இவரிடம், இத்தகைய புத்தகங்கள் இருக்கின்றன என்பது பற்றிய தகவலை குடிவரவு, குடியகல்வுத் துறை அதிகாரிகள் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினர் என்று கூறப்படுகிறது. அதையடுத்து பொலிஸார் அவரிடம் சோதனையிட்டனர். அச்சமயமே புலிகளினால் வெளியிடப்பட்டவை எனக் கருதப்படும் நூல்கள் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒற்றையாட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சொற்ப வாக்குகளே கிடைத்தன.

இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சி முறைக்குள்ளேயே தீர்வு காணப்பட வேண்டும் என்ற தெளிவான ஆணையுடனேயே முழுக்க முழுக்க சிங்கள வாக்காளர்களாலேயே நான் தெரிவு செய்யப்பட்டேன். இப்போது அதற்கு மாறாக நடந்துகொள்ள முடியாது.

அதேவேளை, இலங்கைத் தமிழ் மக் களின் சரித்திர ரீதியான பிரச்சினையை நான் உணர்கிறேன். அவர்கள் பெருமைக்குரியவர்கள். எந்தக் குடிமகனது உரிமைகள் நசுக்கப்பட்டாலும் அது எல்லோரது உரிமைகளும் நசுக்கப்படுவதற்கு ஒப்பானதாகும்.

தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியவை. உண்மையான அபிலாசைகள் வழங்கப்பட வேண்டியவை.

தமிழ் மக்களின் இன கௌரவமும் மொழி அடையாளத்துவமும், பிரபாகரனுடனோ அல்லது பிரபாகரன் இல்லாமலோ மதிக்கப்பட வேண்டியவை. அவ்வாறில்லை என்றால் இனப்பிரச்சினையைத் தீர்க்கவே முடியாது.

பிரபாகரனே சமாதானத்துக்கான பிரதானதடை. விடுதலைப் புலிகள் நோர்வே தலைமையிலான சமாதான ஒப்பந்தத்தை கேலிக்குரியதாக்கிவிட்டார்கள்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என்னிடம்மறைமுகமானதிட்டம் எதுவும் இல்லை. பெரும்பான்மையான தமிழ் மக்கள் எல்லாவற்றுக்கும் மேலாக அமைதியை விரும்புகிறார்கள். ஈழம் அவர்களைப் பொறுத்தவரை யில் ஒரு மாயையே.

தமிழர் தரப்புகள் சமாதானத்துக்கான உருப்படியான முன்மொழிவுக்களை ஒன்றித்துச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். பிரபாகரன் தமிழ் மக்கள் எல்லோருக்காகவும் பேசவில்லை - என்று ஜனாதிபதி சொன்னார். (அ)

## பல புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசை மக்களின் ஆதரவுடனேயே வீழ்த்துவோம்."

- இவ்வாறு மேலும் அறிவித்திருக்கின்றது ஜே.வி.பி.

அரசின் புதிய வரி விதிப்புத் திட்டங்களையும் அது வன்மையாகக் கண்டித்துள்ளது.

நேற்றுக் காலை நாடாளுமன்றத் தொகுதியில் இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே ஜே.வி.பி. சார்பில் அதன் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸ்ஸநாயக்க இதனை அறிவித்தார்.

அரசு மேற்கொள்ளவிருக்கும் புதிய வரிவிதிப்புகள் தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வறுமைக் கோட்டின் கீழ் பட்டினியுகத்தில் மக்கள் வதைபடும் போது 107 பேரை அமைச்சர்களாக்கி அவர்களின் ஆடம்பரச் செலவுகளுக்காக பணம் தேடுகின்றது அரசு.

அதனைத் திரட்டுவதற்காகப் பல்வேறு வழிகளில் புதிய வரிகளை விதிக்கவும் அது திட்டமிட்டுள்ளது.

நாட்டு மக்கள் மீது புதிய புதிய வரிகளை சுமத்துவதை விட்டு அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த அரசு நவம்பர் மாதத்தில் வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கவுள்ளது. எனினும், 2007ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தையே நடைமுறைப்படுத்த முடியாமல் அது மூச்சுத் திணறுகின்றது - என்றார். (சி)


COMPUTER EXPRESS
Institute of Information Technology
Head Office: #15, Sirambiyadi Lane, Jaffna
Branch : #167, Kasthuriyar Rd, Jaffna. 021-222-8250

Diploma in Computerized Accounting

Accpac+QuickBooks Premier+MYOB

ஆகிய முன்னணி Accounting Software அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்

Tally Accounting Package
புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.
Network ஊடான கணக்குபதிவு முறைகளுடன்.

வகுப்புக்கள் ஆரம்பம் :
Weekday 13/09/2007, 17/09/2007 02PM
Weekendday 08/09/2007, 09/09/2007 03PM

Course Contents
❖ Fundamentals of IT, ❖ Manual Accounting, ❖ Financial Accounting, ❖ Cost Accounting, ❖ Taxation (Including VAT), ❖ Stock Control, ❖ Bank Reconciliation, ❖ Budgeting, ❖ Fore Casting, ❖ Business Planing

மானிப்பாயில் முதன் முதலில்
100% Practical Education !!!
பதிவுகளை 12.09.2007க்கு முன் மேற்கொள்ளவும்

After A/L?? Diploma in Computer Servicing Technician After A/L??

Electronic Components Study
Digital Electronics
Practical Electronics (UPS, Power supply, Monitor, Printer)
Telecommunication
Trouble Shooting Guides
Computer Customizations
PC Assembling
Etc..

உங்கள் கணனிகளை 100% நீங்களே திருத்துவதற்கானதும், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இலகுவில் தொழில் வாய்ப்பை 100% நீங்கள் பெற்றுக்கொள்வதற்கான தொழில்சார் கணனிக்கற்கைநெறி

மேலதிக விபரங்களுக்கு :-
UNI TECHNOLOGY
Manipay T.P:- 0777-110862
(மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 28 - 06 - 1973 |  | 06 - 08 - 2007 |

### அமரர் வைரமுத்து ஞானசேகர் (சேகர்)

எங்கள் நெஞ்சமதில் என்றும் வாழும் அன்பு உறவே!
உம்மை நாங்கள் எப்படி மறப்போம்!
என்றும் உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கும்.

முதலாம் வட்டாரம்,
நயினாதீவு. (64556)

வை.சுதாகர்
(சகோதரன்).

## சித்தாண்டியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிட்டிருக்கின்றது.

எனினும், இந்தச் சம்பவம் தொடர்பில் விடுதலைப்புலிகள்தரப்புத்தகவல்கள் எவையும் இந்தச் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிட்டவில்லை. (எ)

## நாடாளுமன்றுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், இக்கூட்டங்களும் ஜனாதிபதி மாளிகையிலேயே நடக்கின்றன. இதனால் அவற்றில் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பங்களிப்பு இல்லாமல் போய்விடுகின்றது. எனவே, இவ்வாறான கூட்டங்கள் நாடாளுமன்றத்திலேயே நடத்தப்படவேண்டும்- என வலியுறுத்தினார் ஜோசப் மைக்கல் பெரேரா.

அப்போது குறுக்கீடு செய்த அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோப்புள்ளே, ஜனாதிபதி இங்கு நாடாளுமன்றத்திற்கு வந்து குழுக்கூட்டங்களில் கலந்துகொள்ள முடியாது. அவர் இங்கு வருவதற்குப் பாதுகாப்பு இல்லை. எனவே, ஜனாதிபதியின் கீழ் உள்ள அமைச்சுக்கள் தொடர்பான குழுக் கூட்டங்கள் ஜனாதிபதி மாளிகையிலேயே நடைபெறும். அவற்றை இங்கு நடத்தமுடியாது - என்று கூறினார்.

அமைச்சரின் கூற்றை ஜே.வி.பி உறுப்பினரான அனுரகுமாரதிஸநாயக்க வன்மையாக ஆட்சேபித்தார்.

ஜனாதிபதிக்கு அடுத்த உயர் பதவியில் இருப்பவர் பிரதமர். அவர் நாடாளுமன்றம் கூடும் நாள்களில் எல்லாம் வருகின்றார். கேள்விகளுக்குப் பதில் அளிக்கின்றார். ஜனாதிபதிக்கு மட்டும் ஏன் இங்கு வரமுடியாது?

ஜனாதிபதிக்கு ஆபத்து என்றால் பிரதமர் உட்பட 225 நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிலை என்ன? -என்று கேள்வி எழுப்பினார் அவர்.

இந்தவேளையில் ஐ.தே.க. உறுப்பினரான லக்ஷ்மன் செனவிரத்ன, "சபாநாயகர் அவர்களே! ஜனாதிபதி நாட்டின் மூலை முடுக்குகளுக்கு எல்லாம் போய்க்கூட்டம் நடத்துகின்றார். அங்கு எல்லாம் இல்லாத ஆபத்து அதி உயர் பாதுகாப்பு இடமான நாடாளுமன்றத்தில் இருக்கிறதா?" என்று கேட்டார்.

இதனை ஜே.வி.பியினரும் ஆதரித்து கருத்துத் தெரிவித்தனர்.

இறுதியாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நிலையியல் கட்டளை மற்றும் அரசமைப்பு என்பவற்றைச் சுட்டிக்காட்டி உரையாற்றினார்.

இதனை அவதானமாகக் கேட்டுக் கொண்ட சபாநாயகர் இவ்விடயம் தொடர்பாக பரிசீலனை செய்யப்படும் என உறுதியளித்தார். (சி)


A/L புவியியல்
Mr. T. ஸ்ரீகன் B.A. (Hons) (Geo. spl)
★ மானிடப் புவியியல்
★ படவேலை
★ சூழல் புவியியல்
TAMIL Mr. S. சிவா B.A.
LOG Miss N. சசிகலா B.A.
CHRIS Mrs. A. மல்லிகா B.A.
DRAMA ஆசிரியர்.
சிங்களம்
(பேச, எழுத, வாசிக்க)
Sat., Sun. 4.30 p.m.
Mr. J.R. குரு
SHAMROCK சச்சமோட்டை, யாழ்.

A/L 2008 PHYSICS Exam
அலகுரீதியான தொடர் பரீட்சையும் அதற்கான விளக்கங்களும்
(வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்)
பரீட்சை - 01 (08.09.20007)
Sat.- 4 - 6 p.m.
By. K. Selvan
NAVALAR, Jaffna.

A/L Day Class
கணித உயிரியல் பிரிவுகள்
CHE.: S. VASU ஆரம்பம்: 05.09.2007 இன்று 1 p.m.
PHY.: K. SELVAN ஆரம்பம்: 08.09.2007 சனி 11 a.m.
MAT.: B. MAYOORAN
BIO.: GANENTHERAN
NAVALAR JAFFNA.


### தவறிவிட்டது

12ஆம் வட்டாரம், நெடுந்தீவு கிழக்கு, நெடுந்தீவைச் சேர்ந்த தயாநந்தி தர்மலிங்கம் என்பவருடைய தே.அ.அட்டை (907232 808V),விசேட அடையாள அட்டை என்பன யாழ். வீதிக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 65/6,மருதடிலேன்,நல்லூர்,யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொ.பே.இல:021 222 5638.


பிறைற்றின் கல்வி நிலையம்
சாவகச்சேரி
Spoken English With Grammar
BY: BRITTO
ஆரம்பம் :- 06.09.2007 Thusday 10.30A.M.
(Tue., Thurs 10.30 a.m.)
அனுமதிகளை உடன் பெற்றுக்கொள்ளவும்.


## பயங்கரவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து தெரிவித்தவை வரு மாறு:-

புலிகளின் பயங்கரவாத நடவடிக்கை இன்னும் ஓய்ந்துவிடவில்லை. கிழக்கில் அவர்கள் மேற்கொண்ட பயங்கரவாதத்தை அவர்கள் இப்போது வடக்கில் தொடங்கியுள்ளனர்.

கிழக்கில் இருந்து ஓடிய புலிகள் இப்போது வடக்கில் பயங்கரவாதத்தை மேற்கொள்ள முற்படுகின்றனர். படையினர் மீது இரசாயன ஆயுதத் தாக்குதலை நடத்த அவர் கள் முயற்சியெடுத்துள்ளனர். அவர்கள் வடக்கிற்குக் கடத்திச்சென்ற இரசாயனப் பொருள் அடங்கிய வாகனம் ஒன்றைப் படையினர் அண்மையில் கண்டுபிடித்தனர்.

புலிகள் எந்தவிதமான பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட முயன்றாலும் நாம் அதை முறியடிப்போம். மக்களை நாம் புலிகளின் பயங்கரவாதத்தில் இருந்து மீட்டெடுப்போம் - என்றார். (சி)


A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களிற்கான SCCஇன் விசேட கணனி பயிற்சி நெறிகள்

Special Offer 3000/=

கீழுள்ள பயிற்சி நெறிகளில் இரண்டினை 3000ரூபாவுடன் கற்க, மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

இக்கல்வி ஆண்டில் மிக நவீன கணனித் தொழில்நுட்ப அறிமுகங்களுடன் ஆரம்பமாகும் பயிற்சிநெறிகள்

DIPLOMA IN MICROSOFT OFFICE
DIPLOMA IN HARDWARE ENGINEERING
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
DIPLOMA IN COMPUTER SCIENCE
DIPLOMA IN DESKTOP PUBLISHING
DIPLOMA IN INTERNET E-MAIL
DIPLOMA IN VISUAL BASIC

New Batches Start On
Batch I :- 09,11.09.2007,
Batch II :- 14,15.09.2007

குறைந்த கட்டணம் · அங்கீகாரமுள்ள சான்றிதழ்
இலவசப் பாடநூல் · வரையறையற்ற செய்முறை

குறிப்பிட்டளவு மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட விருப்பதால் ஆர்வமுள்ளவர்கள் உடன்பதிவுசெய்து கொள்ளுங்கள்

Softview Computer College
55, Arasady Road, Jaffna.
T.P: 021 2225170


## மரண அறிவித்தல்கள்

### திருமதி ரஜிந்தினி குகேஸ்சன் (வவா)



இருபாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ராஜ ரஜிந்தினி குகேஸ்வரன்(வவா) 31.08.2007 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் குகேஸ்சனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செபமாலை மற்றும் சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு மகளும் சண்முகம் - தங்கம் தம்பதியரின் பாசமிகு மருமகளும் கர்சியா, யதுர்சன், ஆருசன் (மிது) ஆகியோரின் பாசமிகு தாயும் அமுதலிங்கம், அருள்ராஜா (கனடா), ரவீந்திரராஜா(லண்டன்), சுகுணராஜா (லண்டன்), ராஜசேகர் (கனடா), ராஜறூபா (லண்டன்), ராஜறஞ்சினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் இந்திரா, கேந்திரா (கனடா), ராகுலன் (லண்டன்), சுமதி (லண்டன்), மகாதேவி (இந்தியா), மீனா (கனடா), தவராஜா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் இன்று (05.09.2007) புதன்கிழமை பிற்பகல் லண்டன் நேரம் ஒரு மணிக்கு இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

Mrs. S. Sebamalai,
218, King Road,
Harrow.
HA29JR,
London (UK).
T.P: 00442088687231.

தகவல்:
க. கிருபாகரன் (தம்பி),
இயக்குநர், மது கல்வி நிறுவனம்.
தொ.பே: 0779122918.

### ஆறுமுகம் நவரத்தினம்

அச்சுவேலி, தோப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நவரத்தினம் 02.09.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தெய்வப்பூமலரின் அன்புக் கணவரும் நாகரத்தினம், நடேசமூர்த்தி (அச்சுவேலி), பாலகிருஷ்ணன் (அச்சுவேலி), சற்குருபரன் (லண்டன்), பிறேமா (சுவிஸ்), கமலா (லண்டன்), நளினி (கொழும்பு), நாகேந்திரன் (சுவிஸ்), நகுலேந்திரன் (சுவிஸ்), யசோதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாலசுப்பிரமணியம், தயாபரன் (லண்டன்), ஜெயராஜன் (கொழும்பு), கரிகரன், இரத்தினேஸ்வரி, பிரேமி (சுவிஸ்), சாமினி (சுவிஸ்), வதனா (லண்டன்), சதானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.09.2007) செவ்வாய்க்கிழமை மு.ப, 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தோப்பு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோப்பு,
அச்சுவேலி.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.09.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.